# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 79/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **பி. கணேசன்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை/கணவர் பெயர் | .. | **பழனியப்பகவுண்டர்** | தொழில் | .. | **விவசாயம்** |
| வயது | .. | 65 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **மஞ்சக்கல்பட்டி** | நாள் | .. | 30.01.2023 |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் நாள் திங்கட்கிழமை திரு. கணேசன் த/பெ. பழனியப்பகவுண்டர் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதி தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை.</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1 ஆம் சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து இருக்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 26.04.1969 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 30.01.1995 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 21.02.2017 தேதியிட்ட மஞ்சக்கல்பட்டி கிராம புல எண் 208/4A க்கான பட்டா எண் 881 ன் இணைய வழி நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 21.02.2017 தேதியிட்ட மஞ்சக்கல்பட்டி கிராம புல எண் 208/4C க்கான பட்டா எண் 434 ன் இணைய வழி நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 18.07.2007 தேதியிட்ட மஞ்சக்கல்பட்டி கிராம புல எண் 206/1A, 208/2 ன் பட்டா எண் 47 க்கான சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 03.01.2008 தேதியிட்ட 2ம் பிரதிவாதி அனுப்பியுள்ள இழப்பீடு தொகைக்கான அறிவிப்பு உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 28.08.2014 தேதியிட்ட 2ம் பிரதிவாதி அனுப்பியுள்ள இழப்பீடு தொகைக்கான அறிவிப்பு உண்மை நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 07.11.1990 தேதியிட்ட கிரைய ஆவணம் பதிவு நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /பி.கணேசன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.